2016 பிப்ரவரி 20]

வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவரது கோரிக்கையை நிறைவேற்றிடும் விதமாக அங்கே இரயில்வே பாலம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பைத் தந்தார்கள். ஆகவே, இப்போது முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த முதற்கட்டப் பணிகள் நடைபெற்று முடிந்தவுடன், அங்கே அந்தப் பாலம் அமைக்கின்ற பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

93—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***57389—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வெங்கடசமுத்திரம் ஊராட்சி, இரங்காபுரம் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதி, பேர்ணாம்பட்டு வட்டாரம், வெங்கடசமுத்திரம் ஊராட்சியைச்

சேர்ந்த இரங்காபுரம் அங்கன்வாடி மையத்திற்கு, இரங்காபுரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி வளாகத்திற்குள்ளேயே இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் மிகப் பெரிய பஞ்சாயத்தாக இருக்கக்கூடியது வெங்கடசமுத்திரம் ஊராட்சி. இதற்குட்பட்டு 16 குக்கிராமங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலுள்ள ஒரு குக்கிராமம்தான் இரங்காபுரம். ஏறத்தாழ 700 மக்கள்தொகைக் கொண்ட இந்தப் பகுதியிலே துவக்கப் பள்ளி ஒன்றின் ஓரத்தில், பழுதடைந்த இடத்தில் இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் கடந்த ஐந்தாண்டுகளில் ஏறத்தாழ 22 அங்கன்வாடிக் கட்டடங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடங்களைக் கட்டித் தந்திருக்கின்றேன். இருந்தாலும், போதவில்லை. ஆகவே, இந்தப் பகுதிக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகுவிரைவாகச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மையங்களையெல்லாம் சொந்தக் கட்டடங்களில் மாற்றுவதற்கு, 15,313 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 601 கோடியே 91 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், வேலூர் மாவட்டத்தில் புதிதாகச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு*

2016 பிப்ரவரி 20]

அனுமதியளிக்கப்பட்ட மொத்த மையங்களின் எண்ணிக்கை 112. இந்த 112 மையங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற இரங்காபுரம் ஊராட்சியில் தொடங்கப்படவிருக்கிற புதிய அங்கன்வாடி மையக் கட்டடமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூடுதலாக சிறுபான்மை பள்ளிகளில் இயங்கக்கூடிய சத்துணவுக் கூடங்களுக்கு நியமிக்கப்படும் பணியாளர்கள், உதவியாளர்கள், சமையலர்கள் போன்ற பணியிடங்களுக்கு அந்தச் சிறுபான்மை நிருவாகங்கள் பரிந்துரைக்கின்றவர்களையே நியமனம் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 94, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.